பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

06 11 2025 THURSDAY 12 40 PM

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதற்கட்ட வாக்குப்பதிவு, 121 தொகுதிகளில் அமைதியாக நடைபெற்று வருகிறது.

2. இந்தியா - நியூஸிலாந்து இடையே, 2028ஆம் ஆண்டுக்குள் நேரடி விமான சேவைகளைத் தொடங்க நடவடிக்கை எடுத்து வருவதாக மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

3. பாதுகாப்பு தளவாட உற்பத்தியில் இந்தியாவும் இஸ்ரேலும் இணைந்து செயல்படுவது குறித்து இருநாடுகளும் ஆலோசனை நடத்தியுள்ளன.

4. ஹிமாச்சலப்பிரதேசம் மற்றும் உத்ராகண்ட் மாநிலங்களின் பல்வேறு பகுதிகளில் பனிப்பொழிவு தொடங்கியுள்ளது.

5. உலக துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டி இன்று கெய்ரோவில் தொடங்குகிறது.

**>>>><<<<**

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதற்கட்ட வாக்குப்பதிவு, 121 தொகுதிகளில் அமைதியாக நடைபெற்று வருகிறது.

காலை 11 மணி நிலவரப்படி, 27 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய ஜனதா தள தலைவரும், முதலமைச்சருமான திரு. நிதிஷ்குமார், பட்னா மாவட்டத்திற்கு உட்பட்ட Bakhtiyarpur வாக்குச்சாவடியில் வாக்களித்தார்.

துணை முதலமைச்சர் திரு. சாம்ராட் சௌத்ரி, தாராபூர் தொகுதிக்கு உட்பட்ட Lakhanpur வாக்குச்சாவடியில் தனது வாக்குரிமையை செலுத்தினார்.

ராஷ்ட்ரிய ஜனதா தள கட்சியின் திரு. லாலு பிரசாத், திருமதி. ராப்ரி தேவி, திரு. தேஜஸ்வி யாதவ் உள்ளிட்டோர் பாட்னாவில் வாக்களித்தனர்.

இந்நிலையில், வாக்காளர்கள் முழு உற்சாகத்துடன் தங்களது ஜனநாயக கடமைகளை ஆற்ற வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

இத்தேர்தலில் முதல்முறையாக வாக்களிக்கும் இளம் வாக்காளர்களுக்கு, பிரதமர் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

**>>>><<<<**

மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல், நியூசிலாந்து வர்த்தக அமைச்சர் திரு. Todd McClay-ஐ சந்தித்து இருதரப்பு வர்த்தக உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அந்நாட்டின் Rotorua நகரில் நடைபெற்ற இந்தியா – நியூஸிலாந்து தொழில் நிறுவனங்களின் தலைமைச் செயலதிகாரிகள் பங்கேற்ற வட்டமேஜை நிகழ்ச்சியில் பங்கேற்ற திரு. பியூஷ் கோயல், நியூஸிலாந்து தொழில்துறையினரில் பெரும்பாலானோர் இந்திய வம்சாவளியினராக இருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

நியூஸிலாந்து தொழில்துறையினர் இந்தியாவில் அதிக அளவில் முதலீடு செய்ய முன்வர வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே, திரு. பியூஷ் கோயல் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தமது விமானப் பயணத்தின் போது, ஏர் நியூஸிலாந்து நிறுவனத்தின் தலைமைச் செயலதிகாரி திரு. நிகில் ரவிசங்கருடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக குறிப்பிட்டுள்ளார்.

ஏர் இந்தியா மற்றும் ஏர் நியூசிலாந்து இணைந்து, 2028-ஆம் ஆண்டுக்குள் நேரடி விமானச் சேவைகளைத் தொடங்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

**>>>><<<<**

வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்க்கெரிட்டா, ஈக்வெடார் வெளியுறவு அமைச்சர் திருமதி. Gabriela Sommerfeld-ஐ சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

Quito நகரில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது, வர்த்தகம், மருந்துப் பொருட்கள் தயாரிப்பில், திறன் மேம்பாடு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக திரு. பபித்ரா மார்க்கெரிட்டா தமது சமூகவலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, இரு அமைச்சர்களும் ஈக்வடாரின் தலைநகர் குயிட்டோவில் உள்ள இந்தியத் தூதரகத்தை கூட்டாக திறந்து வைத்தனர்.

>>>><<<<

பாதுகாப்புத்துறை செயலாளர் திரு. ராஜேஷ்குமார் சிங் தலைமையிலான இந்தியக் குழுவினர், இஸ்ரேலில் உள்ள பாதுகாப்பு தளவாட உற்பத்தி தொழிற்சாலைகளை பார்வையிட்டனர்.

இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், பாதுகாப்பு தளவாடங்களை இருநாடுகளும் இணைந்து தயாரிப்பதற்கான வாய்ப்புகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குவது குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும். சுயசார்பு இந்தியா இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வது குறித்தும் இஸ்ரேல் அதிகாரிகளுடன் ஆலோசிக்கப்பட்டதாக அதில் கூறப்பட்டுள்ளது.

>>>><<<<

தீவிரவாத எதிர்ப்பில் Latvia அரசின் உறுதியான நிலைப்பாட்டை இந்தியா வரவேற்றுள்ளது.

Latvia தலைநகர் Riga-வில் நடைபெற்ற இந்தியா – Latvia வெளியுறவு ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற, வெளியுறவுத்துறையின் மேற்கத்திய நாடுகளுக்கான செயலாளர் திரு. Sibi Geroge, ஐ.நா. பாதுகாப்பு சபையில் 2026-27ஆம் ஆண்டில், Latvia உறுப்பினராவதற்கு இந்தியாவின் ஆதரவை தெரிவித்தார்.

இந்த கூட்டத்தின் போது, அந்நாட்டு வெளியுறவு செயலாளர் திரு. Andzejs Vilumsons-சுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது, வர்த்தகம், தொழில்நுட்பம்,

புதுமை கண்டுபிடிப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்த முடிவு செய்யப்பட்டது.

பின்னர், Latvia வெளியுறவுத்துறை அமைச்சர் திருமதி. Baiba Braze-ஐயும் திரு. Sibi Geroge சந்தித்துப் பேசினார்.

>>>><<<<

'வந்தே மாதரம்' பாடல் இயற்றப்பட்டதன் 150ஆம் ஆண்டு விழாவை பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை தொடங்கி வைக்கிறார்.

நாடுமுழுவதும் ஓராண்டு காலத்திற்கு நடைபெறவுள்ள இந்த கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த 150 இடங்களில் 'வந்தே மாதரம்' பாடல் நாளை ஒரே நேரத்தில் பாடப்படுகிறது.

பள்ளி - கல்லூரி மாணவர்கள், அரசு அதிகாரிகள், காவல்துறையினர் உள்ளிட்டோர் இதில் பங்கேற்கவுள்ளனர்.

தில்லி இந்திராகாந்தி விளையாட்டு அரங்கில் நடைபெறும் தொடக்க விழாவில், 'வந்தே மாதரம்' பாடலின் 150 ஆண்டுகால வரலாற்றைக் காட்சிப்படுத்தும் குறும்படம் திரையிடப்படுவதுடன், நினைவுத் தபால்தலை மற்றும் நாணயமும் வெளியிடப்படவுள்ளது.

இதனிடையே, தமிழகத்தின் தருமபுரியில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளியில், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இன்று வந்தேமாதரம் பாடலை பாடினர்.

இது இளையோரிடையே தேசப்பற்றை ஊக்குவிப்பதாக இருந்தது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – தண்டபாணி 41 செகண்ட்ஸ்)

>>>><<<<

ஜம்மு - ஸ்ரீநகர் இடையேயான நேரடி ரயில் சேவை, விரைவில் தொடக்கப்படும் என்று ரயில்வே தெரிவித்துள்ளது.

இதற்கு ஏதுவாக, இந்த வழித்தடத்தில் ரயில் பாதை அமைக்கும் பணிகளும், ஜம்மு ரயில் நிலைய சீரமைப்புப் பணிகளும் விரைவுபடுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது கத்ரா-விலிருந்து ஸ்ரீநகருக்கு ரயில்கள் இயக்கப்பட்டு வரும் நிலையில், ஜம்மு - ஸ்ரீநகர் நேரடி ரயில் சேவை, கஷ்மீர் பகுதியை நாட்டின் பிற பகுதிகளுடன் இணைக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

>>>><<<<

சென்னை - பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை மற்றும் GST சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகளில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் விதமாக நவீன கேமிராக்கள் பதிவு அடிப்படையிலான தனியங்கி சுங்கவரி வசூல் முறையை அமல்படுத்த தேசிய நெடுஞ்சாலை ஆணையம் திட்டமிட்டுள்ளது.

ஸ்ரீபெரும்புதூர் அருகேயுள்ள நெமிலி, கர்நாடக மாநிலத்தின் சென்னசமுத்திரம் வரையுள்ள சுங்கச்சாவடிகளிலும், தாம்பரம் – விழுப்புரம் இடையிலான GST சாலையில், பரனூர் சுங்கச்சாவடியிலும் இந்த புதிய நடைமுறை செயல்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

மகாராஷ்டிராவின் பிரசித்தி பெற்ற Neral – Matheran மலை ரயில் சேவை இன்று மீண்டும் தொடங்கியது.

பருவமழை காரணமாக நான்கு மாதங்களாக நிறுத்தப்பட்டிருந்த இந்த ரயில் சேவை இன்று தொடங்கப்படுவதாக மத்திய ரயில்வே அறிவித்துள்ளது.

பனிமூட்டம் நிறைந்த மலைகள் மற்றும் பசுமையான பள்ளத்தாக்குகள் வழியாகச் செல்லும் இந்த ரயில் சேவை, யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய வழித்தடங்களில் ஒன்றாக உள்ளது.

>>>><<<<

உலக அளவிலான இயற்கை பாரம்பரிய தலங்கள் பட்டியலில் இந்தியாவின் Khangchendzonga தேசியப் பூங்கா, சிறந்த இடமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச யூனியன் மேற்கொண்ட ஆய்வில், இந்தியாவிலிருந்து Khangchendzonga பூங்கா மட்டுமே இடம்பெற்றுள்ளது.

இயற்கை எழில் மற்றும் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பூங்கா, கடந்த 2016ஆம் ஆண்டு யுனெஸ்கோ உலக பாரம்பரிய தலங்கள் பட்டியலில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

>>>><<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளிலும் மற்றும் காரைக்காலிலும், இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புதுச்சேரி, ராயலசீமா மற்றும் கர்நாடகாவில் நாளை வரை இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் வடமேற்குப் பகுதியில் அடுத்த இரண்டு நாட்களுக்கு 5 டிகிரி செல்சியஸ் அளவிற்கு வெப்பநிலை நிலவக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, ஹிமாச்சலப்பிரதேசம் மற்றும் உத்ராகண்ட் மாநிலங்களின் பல்வேறு பகுதிகளில் பனிப்பொழிவு நிலவுவதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**>>>><<<<**

உலக துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டி இன்று கெய்ரோவில் தொடங்குகிறது.

இந்தியாவின் சார்பில் மானுபாக்கர், இளவேனில் வாலறிவன் உள்ளிட்ட 40 பேர் இப்போட்டியில் பங்கேற்கின்றனர்.

72 நாடுகளை சேர்ந்த வீரர்கள் பங்கேற்கும் இப்போட்டி இம்மாதம் 17ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

**>>>><<<<**

இந்தியா-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான 4வது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

Gold Coast-ல் நடைபெற உள்ள இப்போட்டி பிற்பகல் மணி 1.45க்கு தொடங்குகிறது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்றுள்ளன.

ஒரு போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது.

**>>>><<<<**